குறைபாடுகளில்லை. ஆனால் கருவை ஏற்றுக் கொள்ளும் தகுதி யற்றதாக இருக்கலாம்; அல்லது கருச் சிதைவு நோய்க்கு ஆளாகி யிருக்கலாம். சில கணவன் மனைவிக்கு குழந்தைகளே இல்லை என்பது போன்ற நிலையாகவும் இருக்கலாம்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு குடியிருப்புகள்.

* 304. வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள ரெவின்யூ டிவிஷனல் அதிகாரிகளுக்கும், தாசில்தார்களுக்கும் அந்தந்த தாலுக்கா தலை நகரங்களில் குடியிருப்பு வீடுகள் கட்டிக்கொடுக்கும் செயற் குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இம் மாநிலத்திலுள்ள கோட்ட ஆட்சித் தலைவர்கள், வணிகவரி அதிகாரிகள், வட்டாட்சித் தலைவர்கள் ஆகியவர்களுக்கு குடியிருப்பு வீடுகள் கட்டும் திட்டம் ஒன்றிற்கு தேதி 26-5-70-ஆம் நாளிட்ட வருவாய்த்துறையின் 1589-ம் எண் ஆணையில் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இந்த ஆணை திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள கோட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் வட்டாட்சித் தலைவர்களுக்கும் பொருந்தும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, கோட்டாட்சி, வட்டாட்சித் தலைவர்களுக்கு வீடு கட்டித்தருவதில், இந்தக் குடி யிருப்புக்களை ஹவுசிங் போர்டு மூலமாக கட்டித்தர அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அந்தத் திட்டம்தான் அரசாலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த ஆணை 26–5–1970-ல் பிறப் பிக்கப் பட்டிருக்கிறது. தமிழகம் பூராவுக்கும் இது செல்லும். அப்படியானால், இந்த ஆண்டு இறுதிக்குள் தாசில்தார் போன்றவர் களுக்கு குடியிருப்புக் கொடுக்க ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளியைப் பற்றி மட்டும் கேள்வியிருப்பதால், புள்ளி விவரங்கள் அது பற்றி மட்டும்தான் இருக்கின்றன. தமிழ் நாடு பூராவுக்கும் ரூ. 53 லட்சம் செலவில் ஸ்டேட் ஹவுசிங் போர்டு மூலம் கட்டித்தர ஒப்புதல் வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, தமிழ்நாடு முழுவதும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது என்று கூறினார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தில் பத்மநாபபுரத்தில் ஆர்.டி.ஓ. ஆபிசுக்குக் கட்டடம் கட்ட அடிக்கல் நாட்டி இன்னமும் வேலை துவங்கவில்லை. அது எப்பொழுது ஆரம்பிக்கப்படும் ?

1971 ஜூலை 19]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவர் அவர்களே, கேள்வி திருச்சி மாவட்டத்தைப் பற்றியது என்றாலும், பத்மநாபபுரம் சம்பந்தமாக, அதற்கான கண்ட்ராக்டர் ஒப்பந்தம் முடிந்து விட்டது. வேலை சீக்கிரமே துவங்கப் போகிறார்கள்.

Relief to victims in fire accidents in Mylapore area

* 305 Q.—THIRU A. SWAMIDHAS : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether financial help was offered to the victims of the fire accidents in Mylapore area in Madras city about the 10th May 1971; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : 10-5-1971 அன்று சென்னை மைலாப்பூர் வட்டாரத்தில் தீ விபத்து ஏதும் ஏற்படவில்லை. மைலாப்பூர் கபாலித் தோட்டத்தில் 9-5-1971 அன்று ஒரு தீ விபத்தும், 11-5-1971 அன்று மற்றொரு தீ விபத்தும் ஏற்பட்டன.

(இ) 9-5-1971 அன்று மாலை 1 மணியளவில் சென்னை மைலாப்பூர் கபாலித் தோட்டத்தில் ஒரு தீவிபத்து ஏற்பட்டது. 323 குடிசைகள் அழிந்து போயின. 737 குடும்பங்கள் பாதிக்கப் பட்டன. இத் தீ விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண மாக ரூ. 33,680 வரை உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

மற்றொரு தீ விபத்து 11-5-1971 அன்று மாலை 2 மணியளவில் சென்னை மைலாப்பூர் கபாலித் தோட்டத்தில் ஏற்பட்டது. அதில் 85 குடிசைகள் பாதிக்கப்பட்டன. 185 குடும்பங்கள் வீடிழந் தனர். பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ. 8,080 வரை உதவித் தொகை யாக வழங்கப்பட்டுள்ளது.

சென்னி மலையிலுள்ள சாயப்பட்டறை

* 306 வினு—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

சென்னி மலை நெசவாளர்கள் கூட்டுறவு உற்பத்தி சங்கத் திற்குச் சொந்தமான சாயப்பட்டறையில் நாளொன்றுக்கு எத்தனை பிரிநூலுக்கு சாயம் போடப்படுகிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சென்னி மலை நெசவாளர்கள் கூட்டுறவு உற்பத்திச் சங்கத்திற்குச் சொந்தமான சாயப்பட்டறை யில் நாளொன்றுக்கு 20,400 முதல் 23,800 பிரிகள் வரை (Hanks) சாயம் போடப்படுகிறது. அதாவது நாளொன்றுக்கு 3-லிருந்து $3\frac{1}{2}$ பேல்கள் வரை (சிப்பம்) சாயம் போடப்படுகிறது.

திரு. சு. துரைசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினு நான் கொடுத்து நான்கு ஆண்டுகள் ஆகின்றன. என்றாலும், அந்த